இதனாற் கிடைக்கும் சகல வருமானமும் ...
தர்மக் கல்விச்சாலைக்கே உபயோகமாகிறது.

# Words of Peace.

# சாந்தி வசனம்.

971

18 SEP 1918

Vol. II.] [No. 10.

सत्यात् नास्ति परो धर्मः

144
181.48

## 1. கர்மநாசம்.

ரிஷிகளின் அனுக்கிரஹம், பரிபூர்ணஸ்திதி,
இவைகளை அடையும் மார்க்கம்.

## 2. மஹாத்மாக்களின் தொழில்.

Published by
A. RATNASABHAPATHI MUDALIAR, F. T. S.,
*Santhi Asramam, T. S. Tirumeyachur,*
Peralam Post Tanjore Dt.

திருமீயச்சூர்
பிர்ம்ம வித்தியா அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பெற்றது.

1918

*All Rights Reserved.*] [விலை அணா 3.

AUM

THERE IS NO RELIGION HIGHER THAN TRUTH

18 SEP 1918

# கர்மநாசம்.

## ரிஷிகளின் அனுக்கிரஹம், பரிபூர்ணஸ்திதி, இவைகளை அடையும் மார்க்கம்.

### பிரவர்த்தி நிவர்த்தி மார்க்கங்கள்.

ஈசுவரன் ஆனந்த ஸ்வரூபி. ஜீவன் ஈசுவராம்சமானபடியால் அவனும் ஆனந்த ஸ்வரூபியாவதற்கு ஸதா யத்தனித்துக் கொண்டிருப்பான். ஸதா ஆனந்தத்தையே அடைய விரும்புவான். நெருப்பினின்று வெளிப்பட்ட பொறி பிரத்யேகமாய் தூரத்திற்குச் செல்லும் வண்ணம், கிரமமாக ஜீவன் ஈசுவரனிடமிருந்து வெளிப்பட்டு வந்து, கல்லினுட் பிரவேசித்து தமோகுண ஸ்வரூபனாக இருந்து கல்லால் உண்டாகும் சொற்ப ஆனந்தத்தாலே திருப்தி யடையாமல் செடியில் பிரவேசித்து, செடியிலுண்டாகும் ஆனந்தத்தால் கூட திருப்தி அடையாமல் ஜந்துவில் பிரவேசித்து, இதனாலுண்டாகும் ஆனந்தத்தாலும் திருப்தி அடையாமல் மனிதனுடைய சரீரத்தில் பிரவேசித்து, மனதை உடைய மனிதனாகி ஸ்தூல சூக்ஷ்ம காரணங்களென்ற மூன்று சரீரங்களை உடையவனாகிறான். பானகத்தில் துணியை நனைக்கின் நனைந்த ஈரத்துணியில் ஜலம், ஜலத்தில் சர்க்கரை, ஒன்றிலே ஒன்று, வியாபித்திருக்குமல்லவா? அவ்விதமே சூக்ஷ்மசரீரம் ஸ்தூல சரீரத்தைவிட அதி சூக்ஷ்ம தத்துவங்களாலே ஏற்பட்ட சரீரமாகையால் ஸ்தூல சரீரத்தில் நிறைந்து வியாபித்திருக்கும். காரண சரீரம் இந்த இரண்டையும்விட

...ன தத்துவத்தாலே ஏற்பட்ட சரீரமாகையால் ...ஸூக்ஷ்ம சரீரங்களில் நிறைந்து வியாபித்திருக்கும். அவ்வாறே புவர்லோகம் பூலோகத்தைவிட அதி ஸூக்ஷ்மமான தத்துவமானபடியால் ஈரத்துணியில் ஜலத்தைப்போல் பூலோகத்தில் புவர்லோகம் வியாபித்திருக்கும். இவ்விதம் சுவர்லோகாதிகள் இன்னம் இன்னம் விசேஷ ஸூக்ஷ்ம தத்துவங்களாலே ஏற்பட்டதாகி, ஒன்றில் ஒன்று வியாபித்து பூலோகத்தினிடமே யிருக்கின்றன. இந்த லோகங்களெல்லாம் ஸ்திதி பேதமேயொழிய ஸ்தலபேதங்களன்று. ஸ்தூல சரீரம் பூலோக தத்துவத்தாலும், ஸூக்ஷ்ம சரீரம் புவர்லோக ஸுவர்லோக தத்துவங்களாலும், காரண சரீரமாகிற விக்ஞானமயகோசம் இவைகளைவிட உத்தமலோக தத்துவத்தாலும் ஏற்பட்டிருக்கின்றன. ஜீவாத்மா ஸ்தூல ஸூக்ஷ்ம காரணங்களென்ற அங்கிகளில் வசித்துக்கொண்டு, பூலோக புவர்லோக ஸுவர்லோகங்களோடு சம்பந்த முடையவனாகி, இச்சரீரங்களால் உண்டாகும் பலவித ஆனந்தங்களையும் அனுபவித்துக்கொண்டிருப்பான். ஸ்தூல சரீரத்தால் விஷயங்களும் தனதான்ய தாரா புத்திராதி ஸம்பத்துக்களும் ஏற்பட்டு, இவைகளால் சிறிது ஆனந்தத்தைக் கொஞ்சகாலம் அனுபவிப்பான். ஸூக்ஷ்ம சரீரத்தால் காமாதி விகாரங்கள், கர்வம், அபிமானம், பேதபாவம் இவைகளை விர்த்திசெய்துகொண்டு, இவைகளால் சொற்ப ஆனந்தத்தை கொஞ்சகாலம்அ னுபவித்துக்கொண்டிருப்பான். அதாவது ஜீவன் "நான் தனவந்தன், புத்திரபாக்கிய முடையவன், பலவான், பெரியவன்" என்று சொல்லிக்கொண்டு ஆனந்தித்துக்கொண்டிருப்பான். ஆனால் தனம் நசித்தவுடனே தனத்தாலுண்டாகும் ஆனந்தமும் நசிக்கும். பலம் பெரியதனம் முதலியவை நீங்கியவுடனே இவைகளால் உண்டாகும் ஆனந்தங்கூட நசிக்கும். துக்கமுண்டாகும். மேலும் விஷயானுபவம் அதிகமாகவே சரீரமும் மனதும் கெட்டு அருசி உண்டாகி துக்கம் தொடரும். ஒருவன் ஜீவியகாலமெல்லாம் தனதான்யாதி ஸகல ஸம்பத்துக்களும் சரீர சௌக்கியமு முண்டாகி, மனுஷ்யானந்தத்தை ஸம்பூர்ணமாக உடைத்தானவனா யிருக்கினும், இந்த ஸம்பத்துக்

களே இப்படிப்பட்டவனுக்குக்கூட முடிவில் துக்கத்தை விளை விக்கும். இவனுக்கு மாணம் ஸம்பவிக்கவே "ஐயோ! எனக்கு சந்தோஷத்தைக் கொடுக்கும் தனதான்ய தாரா புத்திராதிகளை யும், எல்லாவற்றையும்விட பிரியமான சரீரத்தையும் விட்டுப் போகிறேனே" என்று எண்ணிக்கொண்டு மட்டுக்கு அடங் காத துக்கம் உள்ளவனுகிறுன். இவ்விதம் மிதமிஞ்சிய துக்க த்தோடு இவன் மரிப்பான்.

OFFICE ... 18 SEP 1918 ... MADRAS

மரணமென்பது ஜீவன் ஸ்தூல சரீரத்தை விட்டு சூக்ஷ்ம காரணங்களுடன் சரீர புவர்லோகத்திற் பிரவேசிப்பதுவே. மரணமடையுங் காலத்தில், அதாவது ஸ்தூல சரீரத்தை விடும் ஸமயத்தில், எவ்வித சங்கற்பம், அபிமானம், துக்கம் இவனுக் கிருக்குமோ, அச்சங்கற்பம், அபிமானம், துக்கம் இவைக ளுடனே ஜீவன் புவர்லோகத்தில் பிரவேசிப்பானுகையால், மரணமடைந்த க்ஷணமே தான் சிந்தித்துக் கொண்டிருக்கும் தனதான்யாதிகளின் ஆசையால் அவைகளின் சமீபத்திற்கு ஆகர்ஷிக்கப்பட்டு, அவைகளைத் தான் ஜீவித்திருந்தபோது எப்படியோ அப்படியே ஸ்வாதீனத்தில் வைத்துக்கொண்டு அனுபவிக்க வேண்டுமென்பதாக பிரயத்தனிப்பான். ஆனல் ஸ்தூலவஸ்து ஸ்தூல சரீரத்தால் கிரஹிக்கலாமே யொழிய சூக்ஷ்ம சரீரத்தால் கிரஹிக்க சாத்தியப்பட மாட்டாது. ஆகையால் மரணமடைந்தவன் இவ்வஸ்துக்களை கிரஹிக்க முடியாமல் துக்கப்படுவான். இதரர்கள் அவைகளை எடுத்துப் போய் வினியோகஞ் செய்தலையும், அழிப்பதையும் பார்த்து தடுக்க சக்தியில்லாதவனுய் "ஐயோ! என் வஸ்துக்கள் நஷ்ட மாய்ப் போகிறதே" என்று துக்கிப்பான். தன் மனைவி புத்திரர்களோடு பேச யத்தனித்து அவர்கள் சமீபத்திற் குப் போவானே யொழிய, ஸ்தூல சரீரத்திலுள்ள நாம் சூக்ஷ்ம சரீரத்தோடு சஞ்சரிக்கும் இறந்தவர்களைப் பார்க்கமாட்டோ மாகையால், அப்பாரியா புத்திரர்கள் இறந்தவனைக் கவனிக்க மாட்டாமலும் இறந்தவனை லக்ஷியம் செய்யாமலு மிருப்பார் கள். இறந்தவன் இவர்களுடைய சக்தியின்மையை அறியாமல் தன்னை அலட்சியஞ்செய்து, அவர்கள் தங்கள் இஷ்டானுசாரம்

பிரவர்த்தித்துக் கொண்டிருக்கிறார்களென்பதாக பலவித துக்கங்களை சிறிதுகாலம் உடையவனாக இருப்பான். வேறொரு பெரிய துக்கம் இவனுக்குண்டாகும். ஸ்தூல சரீரமே தானென்ற அபிமானத்தோடு இறப்பானாகையால் இறந்தக்ஷணமே இறந்தவன் சிறிதுகாலம் ஸ்தூலசரீரத்தை ஆச்ரயித்திருப்பான். ஸ்தூல சரீரம் வேகும்பொழுதும், மண்ணில் அழுகும்போதும் பார்த்து "ஐயோ! நான் வேகிறேன், அழுகிப்போகிறேன், எனக்குப் பசிதாகம் உண்டாகிறது" என்பதாக துக்கித்துக் கொண்டிருப்பான். நாம் பூலோகத்தில் ஸ்தூல சரீரத்திற்குண்டாகும் கஷ்டங்கள் மாறுதல்கள் நமதென்பதாக எவ்விதம் பாவித்துத் துக்கித்துக் கொண்டிருக்கிறோமோ அவ்விதமே அக்ஞானியான மரணமடைந்தவன் புவர்லோகத்தில் துக்கித்துக் கொண்டிருப்பான். இவ்வித கஷ்டத்தையும், துக்கத்தையும், அக்ஞானத்தையும் போக்கடிப்பதற்கு ஸர்வக்ஞரான ரிஷிகள் பிதிர்கிரியைகளை ஏற்படுத்தி யிருக்கிறார்களாகையால், இவைகளைக் கிரமமாக அனுஷ்டிக்கவேண்டும். அகஸ்மாத்தாயும் யுத்தத்திலும் மறித்தவர்கள் தாங்கள் இன்னும் பூலோகத்திலேயே இருப்பதாகப் பாவித்து வர்த்தித்துக் கொண்டிருப்பார்கள். இவர்களுக்குச் சாந்தம், ஞானம் உண்டாகும் வண்ணம், தியான காலத்திலும் நித்திரைக்குமுன்னும் பக்தர்கள் ஈசுவரனைத் தியானிக்கவேண்டும்.

மேலும் சித்தர்களான ரிஷிகள், ரிஷிகளின் சிஷ்யர்கள் பூலோகத்திலும், இஷ்டப்பட்டபொழுது ஸ்தூல சரீரத்தைவிட்டு புவர்லோகத்திலும் பரோபகாரத்திற்காக ஸூக்ஷ்ம காரண சரீரங்களில் சஞ்சரித்துக்கொண்டிருப்பார்கள். இவ்வித சித்தபுருஷர்கள் இவ்வாறு துக்கப்படும் மிருதர்கள் சமீபஞ்சென்று பின்வருமாறு போதிப்பார்கள்:—"ஸ்தூல சரீரமென்ற அங்கியை பூலோகத்தில் விட்டுவிட்டு நீங்கள் இப்பொழுது புவர்லோகத்திற்கு வந்திருக்கிறீர்கள். வேகுவதும் அழுகுவதும் நீங்கள் விட்டொழித்த அங்கிகளேயொழிய நீங்களன்று. அந்த அங்கிகளை நீங்களே என்று எண்ணுவதாலே அத

ற்குண்டாகும் கஷ்டம் உங்களுக்கு உண்டாகிறதே யொழிய உண்மையில் நீங்க ளிப்பொழுது புவர்லோகத்தில் சூக்ஷ்ம சரீரத்தோடு வசிக்கிறீர்கள். உங்களுடையதென்று பாவிக்கும் தனதான்யாதிகள் தாராபுத்திராதிகள் பூலோகத்தி லிருக்கின்றன. அவைகளுக்கும் உங்களுக்கும் ஸம்பந்தம் நீங்கிவிட்டது. அவைகளிடம் உங்களுக் கிப்பொழுதுள்ள அபிமானத்தால் உங்களுக் கிந்த கஷ்டங்க ளுண்டாகின்றன. விஷயங்கள் சாசுவதமன்று. ஸ்தூலசரீரம் சாசுவதமன்று. இவையெல்லாம் நசிப்பவைகளே. பூலோகத்தில் உங்களுக்குள்ள தேஹாபிமானங்கள் உங்களைத் துடர்ந்து துக்ககாரணங்களாயின. அபிமானத்தை ஒழித்தல்வேண்டும். ஜீவன் ஸ்தூல சரீரமன்று. சூக்கும காரண சரீரங்களுமன்று. இவைகளுக்குப் புறம்பானவன். விஷய இச்சை விஷயானந்தம் இவைகள் வர்ஜிக்கப்படவேண்டியவைகள். நசிக்கும் வஸ்துக்கள் சாசுவதானந்தத்தை அளிக்காது. நித்யானந்தத்தை நித்திய சுத்த புத்தமான ஆன்மாவைத் தவிர்த்து மற்றவைகளெல்லாம் துக்கத்தை உண்டாக்கக் கூடியவைகள். ஜீவன் இந்த மூன்று சரீரங்களும் தானே என்றெண்ணுவதால் விஷயங்களாலுண்டாகும் ஆனந்தம் உண்மையான ஆனந்த மென்பதாகப் பாவிக்கிறான். புவர்லோகத்தில் உங்களுக்கு அவ்வித விஷய ஸம்பந்த மில்லாதபடியால் துக்கம் உண்டாகின்றது. ஜீவன் இந்த மூன்று சரீரங்களுக்கும் பின்னன், புறம்பானவன், அதீதன், ஆனந்தமயமானவன்; ஆகையால் நீங்கள் ஆத்மானுபவத்தை அடையவேண்டும்" என்று போதிப்பார்கள். இவ்வுபதேசங்களைக் கேட்ட மிருதர்கள் சிலர் புவர்லோகத்தில் (நரகத்தில்) விஷயாபிமானத்தை ஒழித்து நிஷ்டை யுடையவர்களாவார்கள். (நாரதபுராணம் பார்க்க.)

இவ்விதம் நமக்கு அனேக ஜன்மானுபங்களாலும், ஞானத்தாலும், பெரியோர்களின் தயையாலும், விஷயங்கள் துக்க ஸ்வரூபங்களே யொழிய சாசுவதமான ஆனந்தத்தைக் கொடாதென்ற ஞான முண்டாகும். இவைகளிடம் அபிமானத்தை ஒழித்து ஸ்திரமான ஆனந்தத்தைக் கொடுக்கும் வஸ்துவெது?

அவற்றை எப்படி அடையவேண்டும்? அவற்றை அடைவதற்கு எந்த தர்மங்களை அனுஷ்டிக்கவேண்டும்? இந்த விபரங்களைத் தெரிவிக்கக் கூடியவர்கள் எவர்? என்பதாய்த் தேடப் பிரயத்தனிப்போம். இதுவே நிவர்த்தி மார்க்கம். வேறுமார்க்கம் பிரவர்த்தி மார்க்கம். இவ்விதம் விசாரிக்க ஆன்மா (ஈசுவரன்) ஒருவனே, எந்தவிதமான அபரிசுத்த கர்மமுமில்லாதவனென்றும், நித்திய சுத்த கர்ம ஸ்வரூபனென்றும், ஞானனந்த ஸ்வரூபனென்பதாகும் தான்கூட ஆத்ம ஸ்வரூபனுதற்கு யத்தனிக்க வேண்டுமென்றும், பெரியோர்களாலும் கிரந்தங்களாலும் தெரிந்துகொள்வான். ஜீவன் ஈசுவரனைப்போ லொத்தவனுதற்கு கர்மநாசத்தைச் செய்துகொள்ளவேண்டும்.

## ஜீவன் கர்ம நாசத்தைச் செய்துகொள்ளும் விதங்கள்.

விசேஷ ருணத்தைச் செய்தவன் ருணவிமுக்தனுக வேண்டுமானுல் (1) இனிமேல் புதிய கடன்படாமல் இருக்க வேண்டும், (2) பழைய கடனைக் கஷ்டப்பட்டுப் பொருள் சம்பாதித்துத் தீர்த்தல்வேண்டும். இவ்வாறு செய்தாலல்லவா ருணபாதை யொழியும். இனி ஸம்பாதிக்கும் திரவியத்தை ஏழைகளுக்குக் கொடுக்க ஏற்பட்டு, அனேகருக்கு நன்மைகளைச் செய்ய முடியும். அவ்விதமே ஜீவன் கர்ம நாசத்தைச் செய்துகொண்டு ருணவிமுக்தனுக வேண்டுமாயின், புதிய பாவத்தை ஒன்றையேனும் செய்யா திருத்தல்வேண்டும். நற்காரியங்களைச் செய்துகொண்டு, அவகாச முண்டானபொழுதெல்லாம் பரோபகாரத்தைச்செய்துவரல் வேண்டும். இந்த அவகாசமெல்லாம் பூர்வம் செய்த கடனைத் தீர்ப்பதற்குக் கடவுள் ஏற்பாடு செய்திருக்கின்ருராகையால், தப்பாது பிரதி அவகாசத்தையும் வியர்த்தம் செய்யப்படாது. ஸாத்விகஆஹாரத்தால்ஸ்தூல சரீரத்தைப் பரிசுத்தமாகச் செய்துகொள்ள வேண்டும். இந்திரிய நிக்கிரஹம், மனப்பிரஸாதம், ஸத்ஸங்கற்பம் உடைத்தாகி ஜீவகோடிகளின் பரிசுத்தத்திற்காகவும், சாந்தத்திற்காகவும் ஸதா ஈசுவரனை தியானித்துக்கொண்டிருக்கவேண்டும். இவற்றைப் பலாபேக்ஷை, அஹங்காரமின்றிக் கடமையாகவும் பிரே

மையுடனும்செய்தல்வேண்டும். தெய்வீக ஸம்பத்தை அடைய வேண்டும். (கீதை, அத்–11) ஒரு நிமிஷமாகினும் ஒரு சங்கற்பத்தைக்கூட வீண்விரயம் செய்யப்படாது. நிமிஷ நிமிஷத்திற்கும் ஆயுள் க்ஷீணித்துக்கொண்டிருக்கும். ஒவ்வொரு நிமிஷமும் சேர்ந்து மணியாகும். மணிகள் நாட்களாகி, நாட்கள் மாதங்களாகி, மாதங்கள் வருடங்களாகி, ஆயுள் நசித்து ஜீவியகாலம் முடிவாகும். பிரதிநிமிஷமும் ஆயுள் விஷ ஜாட்டியத்தைப்போல் நசிக்கச் செய்துகொண்டிருக்கும். நிமிஷங்களை வீணில் கழித்தின் ஆயுளை வீணில் கழித்தவர்களாவோம். கோடி ரூபாய்கள் தனத்தை வீண்விரயம் செய்து தொலைத்துகொண்டாலும் திரும்பவும் சம்பாதிப்பதற்கு சாத்தியமாகும். ஆனால் வீணில் கழித்த நிமிஷமோ எத்தனைகோடி ரூபாய்கள் செலவிடினும் மீளவும் வராது. நிமிஷங்கள் மதிப்பில்லா விலையுள்ளவைகளாகி மோக்ஷதாயக முள்ளவைகளாயிருக்கின்றன. ஆகையால் பிரதி நிமிஷத்தையும் மஹா பவித்திரமுடையதாக எண்ணி, ஒரு நிமிஷத்தையாகிலும் வீண்கழிக்காமல் அததற்குத் தக்க ஸத்கார்யங்களைச் செய்தல்வேண்டும். அந்தந்த நிமிஷத்தில் எந்தெந்த நல்லகாரியங்கள், நல்ல பேச்சுக்கள், தியானம் இருக்க வேண்டுமோ அவைகளைத் தப்பாது அனுஷ்டிக்கவேண்டும். இல்லாவிடின் அந்தந்த நிமிஷம் நமது கைக்கு எட்டியபின்னர் மின்னலைப்போல் மறைந்து சென்றகாலத்தோடு சேர்ந்து, நமது கர்மம்,பாபம், அபரிசுத்தத்வம், கடன் இவைகளை விர்த்தி செய்து செல்லும். ஆகையால் பிரதிபக்தனும் ஒருநிமிஷமாகினும் வீண் விரயம் செய்யப்படாது. இதுவே ராஜயோகியின் முக்கியதர்மம்.

இவ்விதம் ஆத்மானாத்ம விவேகம் ஏற்பட்டு, வைராக்கியமுள்ளவர்களாகி, சமதமாதிகளையும் விர்த்திசெய்துகொண்டு சர்வபூத தயையும் முமுக்ஷுத்வத்தையும் அப்பியசித்தல் அத்யாவசியகம். இந்த நாலுவிதங்களான அப்பியாசங்களுக்கே சாதன சதுஷ்டய ஸம்பத்தியென்று பெயர். இந்த சாதன சதுஷ்டயத்தை அடைவதால் ஸ்வலாப நோக்கம் கொஞ்சம் நசித்து விஷய இச்சைகுறையும். இவ்விதம் செய்யின் புதிய

கடன் வளராது, கொஞ்சமீட்டும் நின்றுவிடும். ஆகாமிய கர்மம் விசேஷமாக ஏற்படாமற்போகும். சஞ்சிதம் கொஞ்சம் நசிக்கும். பூர்த்தியாய் நசிப்பதற்கு ஸத்குரு கடாக்ஷமும் ஸத்குரு உபதேசானுஷ்டானமும் உடையவர்களாயாகவேண்டும். இல்லையேல் சாத்தியப்படாது. இவ்விஷயமாய் பிரம்மஞான சபையைசேர்ந்த திவ்ய திருஷ்டியுள்ளவர்கள் சொன்னவையிங்கு எழுதப்பட்டன. இவை நமது ஹிந்து சாஸ்திரத்திற்கும் அசம்மத முடையவைகளன்று.

## கர்மஸ்வருடம், கர்மம் பூர்த்தியாக நசிக்கும் விதம்.

ஜீவன் ஸ்தூலசூக்கும காரணங்களென்ற மூன்று அங்கிகளுக்குள்ளாக நிர்ப்பந்திக்கப்பட்டு இச்சரீரங்களே தானென்பதாக பாவித்துக்கொண்டிருக்கிறுன். ஸ்தூலசரீரம் நெருப்பால் வேகும்பொழுது, ஜீவன் தானே வேகிறேமென்பதாகவும், ஸ்தூல சரீரத்திற்குண்டாகும் எல்லா மாறுதல்களும் ஜீவன் தனதென்பதாகவும் பாவித்துக்கொண்டிருப்பான். ஸ்தூலசரீரமே தானென்றெண்ணுவதாலே, ஜீவன் ஸ்தூலசரீரம் தானே எனும் பந்தத்தையும் கர்மத்தையும், "யத்பாவம் தத்பவதி" என்ற வண்ணம் விர்த்திசெய்துகொள்வான். இவ்விதம் ஸ்தூல சரீரத்தோடு ஐக்கிய பாவத்தை அடைந்து ஸ்தூலாபிமானம் என்ற கர்மம் ஜன்ம ஜன்மத்திற்கும் விர்த்தியாகும். ஒருவன் நல்ல காரியங்கள், சங்கற்பங்க ளுடையவனுயிருப்பினும் ஸ்தூல சரீரம் தானென்ற பிராந்தி நிவர்த்தியாகும்வரை ஸ்தூலம் தானென்று எண்ணுவதால் உண்டாகும் கர்மம் விர்த்தியாகிக் கொண்டிருக்கும். இவ்விதம் கர்மம் அதிகரித்துக்கொண்டிருக்கும். தான் ஸ்தூலசரீரமன்று, விலக்ஷணன், பின்னன் என்பதான பாவத்தைப் பலப்படுத்திக் கொள்ளவேண்டும். நாம் தரித்துக்கொள்ளும் அங்கி நாமல்லவென்பதாகவும், அங்கி வேறு நாம்வேறு என்ற நிச்சயஞானம் எப்படி நமக்குண்டோ, அப்படியே ஜீவாத்மாவிற்கு தான் வேறு ஸ்தூலசரீரம் வேறென்ற நிச்சயஞானம் உறுதிப்படவேண்டும். அதாவது ஸ்தூல சரீரத்திற்கு எவ்வளவு கஷ்டங்கள் உண்டாகினும் அவைகள்

தன்தல்லவென்பதாக எண்ணி தான் இவற்ருல் மனோவிகாரத்தை அடையாதிருக்கவேண்டும். அங்கியைச் சுட்டாலும் கிழித்தாலும் தானெவ்விதம் மாருதிருப்பனே அப்படியே ஸ்தூல சரீரத்திற் குண்டாகும் கஷ்டங்களால் தான் சலிக்காமலும் மாருமலும் இருக்கவேண்டும். இது எப்படி உண்டாகுமோ யோசிப்போம். ஸ்தூலம்தானன்று. இது தனது உபகரணம். இது தான் பூலோகத்தில் நல்லதொழில்களைச் செய்வதற்கு ஏற்படுத்தப்பட்ட தென்பதாகத் தெரிந்துகொண்டு ஒருநிமிஷமாகிலும் மறவாதிருத்தல் வேண்டும். ஆகையால் ஸ்தூல சரீரத்தை சாத்விக ஆஹாரத்தாலே ஆரோக்கிய ஸ்திதியில் அமைத்து ஸத்காரியங்களுக்கே உபயோகப்படுத்தவேண்டும். இவ்விதம் செய்யின் ஸ்தூலசரீரம் தன் ஸ்வாதீனப்பட்டுச் சொன்னபடி கேட்கும். இல்லாவிடின் சரீரம் நம்மை உட்படுத்திக்கொண்டு சரீரமே நாமென்ற பிராந்தியை விர்த்திப்படுத்தும். இவ்விதமிந்த சரீரத்திற்கு தான் பின்னர் எஜமானன் என்றெண்ணி சரீரத்தால் சத்காரியங்களையே செய்துக்கொண்டு இருக்கப் பார்த்தல்வேண்டும். இவ்விதம் சதா ஸ்தூல சரீரத்திற்கு தான் சாக்ஷி என்ற எண்ணம் ஒருநிமிஷமாகினும் மறக்கப்படாது. மறந்த க்ஷணமே தானே சரீரமென்ற எண்ணமுண்டாகிக்கெடும். இவ்விதம் மறவாமலிருப்பதற்கு தான் சாக்ஷியென்பதாகவும் நித்திய சுத்தபுத்த முக்த ஸ்வரூபனென்பதாகவும் பாவம் ஏற்பட்டுத் தியானபரனுக வேண்டும். சற்குரு உபதேசப்படி பிரவர்த்திக்கவேண்டும். இப்படிச் செய்து கொண்டு வரவர ஸ்தூலசரீரம் தானென்ற பாவம் கொஞ்சமட்டும் குறையும். பூர்த்தியாய்ப் போகாது. ஏனெனின் பகலெல்லாம் இவ்விதம் வர்த்திக்கினும் நித்திரை வந்தக்ஷணமே இதை மறக்கும். உரங்கும் காலத்தில் இவன் சரீரத்தைக் கத்தியால் வெட்டக்கண்டால், விழித்துக்கொண்டு "அப்பா! எனக்கு அடி விழுந்தது" என்று சொல்லிக்கொண்டு எழுந்திருப்பான். அவ்வித பாவம் சரீராபிமானத்தை திரும்பவும் தெரியப்படுத்தும். நித்திரை காலத்திலும் நித்திரையைவிட்டு எழுங் காலத்திலுங் கூட ஸ்தூலம் நானல்லவென்ற பாவம் ஞாபகத்தில் ஸ்திரப்படும்

வரைக்கும் ஸ்தூலசரீர அபிமானத்தைப் பூர்த்தியாகத் தவிர்ப்பது சாத்தியமன்று. இவ்விதம் ஜாக்கிர ஸ்வப்ன சுழுத்தி என்ற மூன்று அவஸ்தைகளிலும் எல்லா சரீரங்களுக்கும் எல்லா அவஸ்தைகளுக்கும் தான் சாக்ஷியென்றும், விலக்ஷணனென்றும் அறிந்துகொண்டு அந்த ஞானத்தினிடமாக நிச்சலனமாயிருத்தற்குப் பிரயத்தனப்படவேண்டும். இது எப்பொழுது உண்டாகுமோ யோசிப்போம். நாம் தரித்துக்கொள்ளும் அங்கியைக்கழற்றி அதை ஒரு ஆணியில் மாட்டவே அதைப்பார்த்து நாம் வேறு அங்கிவேறு என்ற நிச்சயஞானம் நமக்கு உறுதியாக எவ்விதம் உண்டாகுமோ, அந்த அங்கி நெருப்புப்பட்டு எரியும்பொழுது எரிவது நாமன்று, அங்கி எரிகிறதென்ற நிச்சயஞானம் நமக்கெப்படியுளதோ அவ்விதமே ஜீவன் தனக்குஉண்மையில் அங்கியாகவிருக்கும் ஸ்தூல சரீரத்தை யோகசக்தியாலும் சற்குரு பிரசாதத்தாலும் விட்டு, மற்ற இரண்டு சரீரங்களான சூக்ஷுமகாரண சரீரங்களோடு வெளியேறி, கொஞ்சதூரத்தில் நின்றுகொண்டு ஸ்தூல சரீரத்தைத் தனது அங்கியாகப் பார்க்கக்கூடியவனுவன். இப்பொழுது ஸ்தூலசரீரம் வேறு தான் வேறு என்ற பாவமும் நிச்சயஞான நம்பிக்கையும் இவனுக்கு உறுதியாக உண்டாகும். இப்படிப்பட்டவன், வீட்டினின்று வெளியில் சென்றவன் வீட்டில் மீளவும் பிரவேசிக்கும் வண்ணமும், கழற்றிவிட்டிருந்த அங்கியைத் திரும்பவும் போட்டுக்கொள்ளும் வண்ணமும், இஷ்டப்பட்டபொழுது ஸ்தூல சரீரத்தில் பிரவேசிப்பான். அதை இவ்வித யோகிமாத்திரம் எல்லா அவஸ்தைகளிடத்தும் தான்வேறு சரீரம்வேறு என்ற நிச்சயஞான முடைத்தானவனுக இருப்பான். மேலும், அவ்விதமே சூட்சும சரீரத்தைக் கூடவிட்டு அதை அங்கியாகப் பார்த்து இஷ்டம் வந்தபொழுது தரித்துக்கொள்ளும் சித்தி வருமளவும் சூக்ஷுமசரீரமும் அதன் தர்மங்களும் தானல்லவென்றபாவம் உறுதிப்படாது. மேலும் ஸ்தூல சூக்ஷுமத்தோடு கூட காரண சரீரத்தையும் விட்டு, இந்த மூன்றையும் அங்கிகளாகப் பார்க்குமளவும் காரணசரீரம், அதன் தர்மங்கள் தானல்லவென்ற பாவமும் பின்னபாவமும் நசியாது. இவ்விதம் ஸ்தூல

ஸூக்கும காரணங்களென்ற அங்கிகளை விட்டு மூன்றவஸ்தைகளையும் கடந்து குணாதீதனாகி துரியாவஸ்தையை அடைந்து பிர்ம்மானந்த முடையவனாவன். சர்வ சமமுடையவனாகி சர்வபூதங்களுக்கும் ஹிதத்தைச் செய்பவனாகி பிர்ம்மானந்தத்தை அடைவான். இவ்வித ஸ்திதியை அடைவதற்கு நாம் எப்படி வர்த்திக்கவேண்டும்? எவ்வித குருக்களின் கடாக்ஷத்தை அடையவேண்டும்? இந்த ஸ்திதியை உண்டாகும்படி செய்யும் மஹாத்மாக்கள் எப்படிப்பட்டவர்கள்? இவ்விஷயங்களை யோசிப்போம்.

225458

## ரிஷிசிஷ்யனாவதற்கும் முச்சரீராதீதனாவதற்கும் வழி.

தீர்க்கரோகம் ஏற்பட்டவன் அந்த ரோகஸ்வரூபத்தையும் சிகித்ஸையையும் தெரிந்த டாக்டர்களிடம் சென்று சிகித்ஸை செய்துகொண்டு நன்மையை அடைவானல்லவா? ஸ்தூல ஸூக்கும காரண சரீராபிமானமென்ற தீர்க்கரோகம் நம்மில் அனேக ஜன்மங்களாக விர்த்தியாகின்றன. இச்சரீர ஸ்வரூபங்களை அறிந்து இவைகளைவிட்டு சாக்ஷிஸ்வரூபர்களாகி முக்தர்களாகி பிர்ம்மானந்தத்தை அடைந்து ஞானஸ்வரூபமானவர்களுக்கே பவரோகமென்ற முச்சரீராபிமானத்தைப் போக்கடிப்பதற்கு சாத்தியமேயொழிய இதரர்களுக்கு சாத்தியமன்று. இவர்களே ரிஷிகள். இம்மஹான்கள் இதர ஆனந்தங்களைக் கடந்து பிர்ம்மானந்தத்தை அடைந்து ஸ்வாராஜ்யானுபவர்களாகி, ஞானானந்தஸ்வரூபர்களாகி மூன்று சரீரங்களையும் விடும் மார்க்கத்தையும் கிரமங்களையும் அனுஷ்டானத்தையும் பூரணமாகத் தெரிந்தவர்களாகையால், ஞானஸ்வரூபாளெனப்படுவார்கள். இவர்களின் அனுக்கிரஹத்தையும், உபதேசத்தையும் பெறுவதற்கு யத்தனிக்கவேண்டும். இதற்காக சாதன சதுஷ்டய ஸம்பத்தி நம்மிடம் விர்த்திசெய்துகொள்ளவேண்டும் இச்சரீரங்கள் தானல்லவென்பதாகவும், தனது அங்கிகளென்பதாகவும், நசிக்கக்கூடியவைகளென்பதாகவும் பாவித்து இவைகளால் உண்டாகும் ஆனந்தங்கூட நசிக்குமென்பதாகத் தெரிந்துகொண்டு, சரீரங்களும் இவைகளால் ஏற்

படும் தனதான்யாதிகளும் நசிக்குமென்பதாகத் தெரிந்துகொண்டு இவர்களிடத்து அபிமானமும் ஆசையுமில்லாது இருத்தலே முதற்படி. பூலோகத்தில் தானடையும் ஆனந்தமும், ஸ்வர்க்கானந்தமுங்கூட சாசுவதமல்லவென்று தெரிந்துகொண்டு, இந்த ஆனந்தங்களைக்கூட இச்சியாதிருத்தல் இரண்டாவதுபடி. அந்தர் இந்திரிய நிக்கிரஹம், பஹிர் இந்திரிய நிக்கிரஹம், காயிகமானஸீக கஷ்டங்களைப் பொறுத்தல், ஸதா ஸந்தோஷமாயிருத்தல், சிரத்தை ஸமாதானம் இவைகளை விர்த்திசெய்துகொள்ளுதல் இவைகள் மூன்றும் படி. ஈச்வரன் எல்லா பூதங்களையும், எல்லோரையும் தன் ஸ்வரூபர்களாகச்செய்வதற்காக அதிக தயையோடு பாடுபடுகிறார். ஆனபடியால் தானும் ஈச்வர ஸ்வரூபனாகவேண்டின் தான் ஈச்வரனைப்போல் ஸர்வபூததயை உண்டாகி ஸதா ஸர்வபூதங்களின் க்ஷேமத்திற்காக காயிகவாசிக மானஸீகங்களாலே பாடுபடல் வேண்டும். இதுவே மோக்ஷ இச்சை. இதுவே பிரேமை. இதுவே நான்காம்படி. இதுவே சாதன சதுஷ்டய ஸம்பத்தி. இவ்வித அனுஷ்டானத்தை பலப்படுத்திக்கொண்டு காரண குருவிடத்தும் ஈச்வரனிடத்தும் திடபக்தி விர்த்தியாக இவன் ரிஷிகளுடைய கடாக்ஷவீக்ஷண்யத்திற்கு பாத்திரனுவன். இது பலப்படவே கொஞ்சகாலத்திற்கு ரிஷிகளில் ஒருவர் தனது (Probationary Disciple) பரீக்ஷிக்கப்படவேண்டிய சிஷ்யனாக அதாவது பிரதம சிஷ்யனாக நியமித்துக்கொள்வார். தேஹத்ரயங்களினின்றும் தேஹத்ரய அபிமானத்தினின்றும் ரிஷிகள் ஜீவர்களை நீக்கி ஆன்மஸ்வரூபர்களாகச் செய்வதற்கு ஸதா பாடுபடுகிறார்கள். (பாகவதம் சித்திரகேது உபாக்கியானத்தைப் பார்க்க.) இவர்களே தோன்றுகுருக்கள். பரிபூரணர்கள். காரண குருக்கள். இந்த ரிஷிகளிலே, ரிஷிகள் எல்லோருக்கும் குருவாகி, ஸகல உபதேசங்களுக்கும் ஆதிஸ்தானமாகி, நித்திய சுத்த புத்த ஸ்வரூபராகி, ஆனந்தமயராகி ஞானஸ்வரூபராகி, அற்புதசக்தி உடையவராகி ஸதா பாலனுகவிருக்கும் ஸ்ரீஸனத்குமாரர் எனப்படும் மஹானுபாவர் ஆதிகுருவாக இருக்கிறார். (பாகவதம்

1, 2 ஸ்கந்தங்கள் கீதை அத். 10.) இவரே சகல உபதேசத்திற்கும் மூலகர்த்தா. இவரைவிட கீழ்ப்படியிலிருக்கும் ரிஷிகள் இவர் ஆக்ஞையை அனுசரித்து லோகோபகாரத்திற்கு ஸதா பாடுபட்டுக்கொண்டிருப்பார்கள். இவர்களில் இரண்டு ரிஷிகள் தங்கள் சிஷ்யர்கள்துவாரா பிரம்ம ஞான ஸபையை (Theosophical Society) ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இந்த ரிஷிகள் மேற்கூறியவண்ணம் அருகமுடையவனை முதலில் தங்கள் சிஷ்யனாக ஏற்பாடு செய்துகொண்டு, பக்குவப்படுத்திக் கிரமக்கிரமமாக ஸ்ரீஸனத்குமாரரின் உபதேசத்திற்கு யோக்கியதை உடையவனாகச் செய்தல் இவர்களின் முக்கியகாரியம். எவன் ஸாத்விகாஹாரபனாகி ஸ்தூல சரீரத்தைப் பரிசுத்த ஸ்திதிக்கும் ஆரோக்கிய ஸ்திதிக்கும் கொண்டுவந்து, ஸ்தூலசரீரத்தால் ஸத்கார்யங்களையே செய்துகொண்டும், இந்திரிய நிக்கிரஹத்தை விருத்தி செய்துகொண்டும், காமக்குரோதங்களை ஜயித்துப் பூததயை உண்டாகி எல்லோருடைய க்ஷேமத்திற்காக ஈச்வரதியானத்தைச் செய்துகொண்டும், நிஷ்டையை அப்பியசித்துக்கொண்டு சாதன சதுஷ்டய ஸம்பத்தி கொஞ்சம்வரைக்கும் ஏற்பட்டவனாயிருப்பனோ அப்படிப்பட்டவனை ரிஷிகளில் ஒருவர் திவ்ய திருஷ்டியால் பரீக்ஷைசெய்து, மேற்சொன்னவிதம் பரிக்ஷார்த்தமாய்(Probationer) சிஷ்யனாக ஏற்படுத்திக்கொள்வர். இவ்வித சிஷ்யன் ஸதா பரோபகாரத்திற்குப் பாடுபட்டு, தியானம், நிஷ்டை, பிர்ம்மசரியம் இவைகளை விருத்திசெய்துகொண்டு பரிசுத்தனாகவேண்டும். இவ்வித சிஷ்யனின் சூக்கும சரீரத்தின் சில தத்துவத்தாலே, அக்குருவான ரிஷி இச்சிஷ்யனுடைய பிரதிபிம்பத்தை ஏற்படுத்திக்கொண்டு, தனது ஆசிரமத்தில் ஒரு ஸ்தலத்தில் அமைப்பார். இச் சிஷ்யனிடம் பிரதிதினமுண்டாகும் மாறுதல்களும், இவனிடம் ஜனிக்கும், சுத்தாசுத்த சங்கற்பங்களும் அந்த ரிஷி ஆச்ரமத்தில் இருக்கும் இவனது பிரதிபிம்பத்தை மாற்றிக்கொண்டிருக்கும். இவ்விதம் அந்த ரிஷி பிரதிதினம் ஒரு ஆவர்த்தி சிஷ்யனுடைய பிரதிபிம்பத்தைப் பரீக்ஷைசெய்து சிஷ்

யனுடைய ஸ்திதியையும் கதியையும் தினந்தினம் கண்டுபிடித்துக்கொண்டிருப்பார். இவ்விதம் சாமானியமாக ஏழுவருடங்கள் அந்த ரிஷி சிஷ்யனைப் பரீக்ஷைசெய்யவே, இவன் நன்ருய் விர்த்திஅடைந்திருப்பானாகில் இந்த சிஷ்யனை ஸ்திரமான சிஷ்யனாக, அதாவது ஏற்றுக்கொள்ளப்பட்ட சிஷ்யனாக (Accepted Disciple) அந்த ரிஷி நியமித்துக்கொள்வார். அப்பொழுது தன் சமீபமுள்ள அந்த சிஷ்யனுடைய பிரதிபிம்பத்தை எடுத்துப்போடுவார். அதுமுதல் இந்த ஸ்திரமான சிஷ்யனிடம் ஜனித்த சங்கற்பங்கள் ரிஷியின் மனதில் பிரவேசித்துக்கொண்டிருக்கும். ஆகையால் இவ்வித சிஷ்யனிடம் ஒரு துஷ்ட சங்கற்பம் ஜனித்தமாத்திரத்தில் இது ரிஷிமனதில் பிரவேசிக்கவே அந்த ரிஷி அதைப் பிரவேசிக்காதபடி செய்யவேண்டிவரும். ரிஷி ஒரு நிமிஷத்தையாகிலும் வீண் சிலவிடாமல் ஸதா தன்னுடைய சங்கற்ப சக்தியையும் காலத்தையும் பரோபகாரத்திற்காக வினியோகப்படுத்திக்கொண்டிருப்பாராகையால், இந்த முக்கிய சிஷ்யன் துஷ்ட சங்கற்பங்களுடையவனு யிருப்பானாகில், ரிஷியின் வேலைக்குத் தடங்கலை உண்டாக்குவித்த மஹாபாபம் இவனுக்கு ஸம்பவிக்கும். ஆகையால் மிகவும் பரிசுத்தமில்லாதவனை முக்கிய சிஷ்யனாக அங்கீகரித்தல் முடியாது. இவ்வித முக்கிய சிஷ்யன் ஸ்திரசுத்தனாகி பரிசுத்த சங்கற்பமுடையவனாகி ஸதா பரோபகாரத்திற்காகப் பாடுபட்டு, ஸத்போதனைகளைச்செய்து தியானித்துவரல் வேண்டும். இவ்வித சிஷ்யன் கொஞ்சகாலத்திற்கு இஷ்டானுஸாரமாக ஸ்தூலசரீரத்தைவிட்டு சூக்ஷ்ம காரண சரீரங்களோடு புவர்லோக ஸுவர்லோகங்களில் சஞ்சரித்துக்கொண்டு, அந்த லோகவாசிகளுடன் கலந்து உரவாடி அங்கு பரோபகாரம் செய்தல் முதலாயுள்ள சித்திகள் உடையவனாவன். அர்ச்சுனன் இஷ்டம் வந்தபொழுது ஸ்வர்க்கலோகம் சென்றுவரவில்லையா? யயாதி கட்டுவாங்கதர்களுடைய சரித்திரங்களைப் பாருங்கள். இவ்விதம் இந்தமுக்கிய சிஷ்யன் சூட்சும சரீரத்தைக்கூடவிட்டு உத்தமலோகங்களில் சஞ்சரிக்கக்கூடியவனாவன். குருடனுக்குக் கண்கள் வரவே,

வர்ணங்கள் ரூபங்களகப்பட்டு ஞானத்தை விர்த்திசெய்து கொள்ளும்வண்ணம், இவ்வித சிஷ்யன் புவர்லோகாதிகளில் சஞ்சரித்து அந்தந்த லோகவாசிகளைப் பார்த்து, அந்தந்த லோகதர்மங்களைத் தெரிந்துகொண்டு, அந்தந்த லோகானந்தத்தையும் அனுபவித்துக்கொண்டு, அந்தந்த லோகஞானத்தையும் விர்த்தி செய்துகொண்டு, ரிஷிகளின் தேஜஸை இன்னும் அதிகமாக அடைந்து, பெரிய ஆத்மானுபவ விஷயங்களையும் ரிஷிகளால் தெரிந்துகொண்டு, இவைகளால் ஆகாமிய சஞ்சித கர்மங்களை நாசஞ் செய்துகொள்வான். ஆனல் இவ்வித சிஷ்யனுக்கு அவனுடைய மூன்ருவது அங்கியான விக்ஞானமய கோசத்தை (காரண சரீரத்தை) விடும் சாமர்த்தியமிராது. அவ்வித சக்தியை உண்டுபண்ணுவதற்கு, குரோர் குருவாயும், ஸதா பாலனுயும், நித்தியமுக்த ஸ்வரூபனுயும், ஆனந்தமயனுயும், ஸர்வபூத ஹிதாதஸ்வரூபனுயும் விளங்கும் ஸ்ரீஸனத்குமாருக்கே சாத்தியம். இவரே ஆதிகுரு. குருவான ரிஷி அவ்வித சிஷ்யனைக் கொஞ்சகால பரீக்ஷித்து இவனை சூக்ஷ்ம சரீரத்தோடு ஸ்ரீஸனத்குமாரரின் கடாக்ஷத்தைப் பெருவதற்காக, அழைத்துக்கொண்டுபோய் அவருக்கு அர்ப்பணம்செய்வார். அப்பொழுது குருவான அந்த ரிஷி "ஸ்வாமி! ஒரு பாலனைத் தங்க ளனுக்கிரஹத்திற்குப் பாத்திரனுகச் செய்திருக்கிறேன். இவனை கடாக்ஷியுங்கள்." என்பதாக அந்தரிஷிஸ்ரீஸனத்குமாரரைப் பிரார்த்திப்பார். அப்பொழுது அவர் அச்சிஷ்யனை ஆசீர்வதிக்கவே அச்சிஷ்யனுக்கு சூக்ஷ்மசரீரத்தோடுகூட விஞ்ஞானமய கோசத்தையும் (காரணசரீரம்)கூடப் பிரித்துவிடும் சாமர்த்திய முண்டாகும். இவன் இதுவரைக்கும் ஸ்தூல சூக்ஷ்மங்களை பிரித்துவிட்டது போல் ஸ்தூல சூக்ஷ்ம காரணங்களென்ற மூன்றையும் பிரித்துவிட்டு இவைகளை அங்கிகளாகப் பார்க்க ஏற்படுகிருன். இவ்வித ஸ்திதியை அடைந்தவுடனே அச்சிஷ்யன் ஆத்மஸ்வரூபனுக சேஷித்து நிற்பான். எல்லோரிடமும், ஸகல பூதங்களிடத்தும் வியாபித்திருக்கும் சைதன்யமும் (ஆன்ம தத்துவமும்) தானும் ஒன்ருக இருப்பதைப் பார்க்கும் அனுபவமுள்ளவனுவான். இவ்வித அனுபவ ஸ்திதி (ஞானஸ்திதி)யில் தான்வேறு இதாள்வேறு என்றெண்ணுவது சாத்தியமில்லாதுபோகும்.

இப்படி இவன் அனுபவஞான முள்ளவனுவான். இதுவே நிஜமான சந்நியாஸம். பரிபூரணபாவம். இதுவே முதல் தீக்ஷை. இவ்வித சந்நியாஸ ஸ்திதியிலிருப்பவன் பரிவிராஜகன் எனப்படுவன். தாய் கர்ப்பத்தினின்று வெளிப்பட்டவன் மீளவும் கர்ப்பத்தில் பிரவேசிக்கவாவது கர்ப்பநரக உபாதியை அடைவதற்காவது, தான்வேறு இதரர்கள் வேறு என்ற பாவம் உண்டாவதற்காவது சாத்தியமில்லை. இப்படிப்பட்டவன் மீளவும் மூன்றுசரீரங்களில் பிரவேசித்திருக்கினும் தன் அனுபவத்தை மறவாது ஸதா சைதன்ய ஸ்வரூபனுகி பரோபகாரத்திற்காகப் பாடுபட்டுக்கொண்டிருப்பான். குருடனுக்குக் கண்கள் வரவே வெளிச்சம், வர்ணங்கள், ரூபங்கள் தென்பட்டு இவன் கண்களை மூடிக்கொண்டாலும் இவனது அனுபவங்களை மறுத்தல் எவ்விதம் சாத்தியமில்லையோ, அவ்விதமே இவ்வித சந்நியாசிக்கு ஆத்மானுபவத்தை மறுத்தல் ஸாத்தியமன்று. இதுவே நிஜமான இரண்டாம் பிறப்பு. துவிஜத்வம். இவனே பரிவிராஜகன், வீடில்லாது திரிபவன். அதாவது இவன் விஷய இச்சையை முற்றிலும் ஒழித்து ஸர்வஸங்கப் பரித்தியாகம் செய்தவன். இப்படிப்பட்டவன் ரிஷி ஆக்ஞையை அனுசரித்துப் பரோபகாரத்திற்கும் நீதிபோதனை செய்வதற்கும் ஆத்மஞானத்தை எல்லோருக்கும் போதிப்பதற்கும் ஸதா பிரபஞ்சத்தில் திரிந்துகொண்டிருப்பான். ஊர் ஊராய்த் திரிவதுமாத்திரமன்று. ஸதா பரோபகாரத்திற்காகப் பாடுபடல்வேண்டும். தேஹாபிமானங்களை அனுபவத்தாலே ஒழித்து இந்த நிஷ்டை பலப்பட்டு திவ்ய திருஷ்டியால் பூர்வஜன்ம ஞானத்தை யுடையவனுகி பூர்வ ஜன்ம சித்தாந்தத்தையும் கர்ம சித்தாந்தத்தையும் ஸ்வானுபவத்தாலே தெரிந்துகொண்டு, இவ்விஷயத்தில் சமுசயமற்றவனுவன். ஆத்மானுபவ முள்ளவனுனபடியால் சாஸ்திரவிஹித கர்மாசரணத்தாலே பந்திக்கப்படமாட்டான். இவனுக்கு மூடபக்தி யிராது. இவ்வித சந்நியாஸி விஷயராகத்தை முற்றிலும் ஒழித்து, நயிஷ்டிக பிர்ம்மசாரியாகி, ஈசுவராக்ஞையை அனுசரித்து வர்த்திப்பான். இவ்வாறு கொஞ்சகாலம் கழியவே ஸ்ரீஸனத்குமாரரின் தயையால் இரண்டாம்படி

தீக்ஷை ஏற்படும். இதுவே குடீசக சந்நியாஸ மெனப்படும். இந்தஸ்திதியில் இவன் ஸ்தூல சூக்ஷ்ம சரீரங்களின் ஸ்வாதீனம், ஊர்த்துவ லோகங்களின் ஞானம் இவைகளை ஜாக்கிராவஸ்தையில் உடையவனாகி, குண்டலினி என்ற சக்தி ஸ்வாதீனமாகிச் சில சித்திகளுடையவனாவன். இவ்வித சக்தியை குரு உண்டாக்குவிப்பார். ஏனையோர்கள் இக்குண்டலினி சக்தியை ஹடயோகாதிகளாலே விர்த்தி செய்துகொள்ளின் கெட்டுப்போவார்கள். ஜாக்கிரஸ்வப்பனங்கள் குருவின்கீழமைந்தசிஷனுக்கு ஒன்றாகும். இச்சித்திகளைத் தன் ஸ்வப்பிரயோஜனத்திற்கு உபயோகிக்கமாட்டான். தான் பெரியவனாகிவிட்டதாய்பாவிக்காமல், ஈசுவரனுடைய உபகரணமாக இந்த சித்திகளையெல்லாம் பரோபகாரத்திற்கே உபயோகப்படுத்துவான். இந்த சித்திகளாலே புவர்லோகாதிகளில் சஞ்சரித்து அந்தந்த லோகத்திலுள்ளவர்களுக்கும், நரகவாசிகளுக்கும், நித்திரைகாலத்தில் நமக்கும் ஸத்போதனைகளைச் செய்வான். நித்திரை காலத்தில் நாம் ஸ்தூலத்தைவிட்டு புவர்லோகத்தில் சூக்ஷ்மாதி சரீரங்களோடு திரிந்துகொண்டிருப்போமாகையால் பக்தியோடு நித்திரைசெய்யின் நமக் கிவ்வித பெரியோர்கள் நித்திரைகாலத்தில் புவர்லோகத்தில் ஸத்போதனையைச் செய்வார்கள். பரிசுத்தர்களாகச் செய்துகொண்டிருப்பார்கள். இறந்துபோய் புவர்லோகத்தில் இருப்பவர்களுக்கும், நித்திரைகாலத்தில் புவர்லோகத்தில் திரிகிறவர்களுக்கும் சூக்ஷ்ம சரீரத்தோடு சென்று அவர்களுக்கு பக்தி, நிஷ்டை, ஞானம் இவைகளைப் போதித்து, அவர்களின் அஞ்ஞானத்தை நிவர்த்திப்பது, அந்தரங்க பக்தர்களுக்கு பலவிதங்களான நலத்தைச் செய்வது, இவர்கள் இடைவிடாது செய்யும் உபகாரங்களாகும். (கடப்பை டிராக்ட் நெ. 17—பார்க்க)

பின்ன ரிவ்வித சிஷ்யன் ஹம்ஸ ஸ்திதியை அடையும் மூன்றாம் தீக்ஷையை உடையவனாவன். அதுமுதல்

தான் ஹம்ஸனுகி, காமராகங்களும் துவந்தபாவமும் நசித்து தான் பரமாத்மாவோடு ஒன்ருகி, பேதபாவ மில்லாதவனுகி, ஸதா ஸர்வ பூதங்களுக்கும் சுகிருதனுகி நலத்தைச் செய்தலே ஸ்வபாவ முடையவனுக ஆவன். இப்படிப்பட்டவனே உண்மையான ஹம்ஸ சந்நியாசி. இதற்கப்பால் ஸ்ரீஸனத்குமாரர் அனுக்கிரஹத்தினுலே நான்காம்தரகதி சந்நியாசியாகும் பரமஹம்ஸனுவன். (நான்காம் தீக்ஷை) அப்பொழுது ஜாக்கிராவஸ்தையில் துரியானுபவ முள்ளவனுவன். எல்லாம் தானுகி ஆனந்தமயனுவன். இதற்கப்பால் ஆதிகுருவின் ஸஹாயத்தாலே ஜீவன்முக்தனுகி பூரண ரிஷி (மாஸ்டர்) ஆவன். இவ்விதம் பிரதி ஜீவனும் படிப்படியாக ஏறிவந்து ரிஷியாதல் வேண்டுமென்பதாக ஈசுவரனுடைய சங்கற்பம். (Divine Plan) நாரத ரிஷிகூட ஒரு சமயம் தாஸி புத்திரனுகவிருந்து க்ரமமான அனுஷ்டானத்தாலும், பக்தியாலும் ரிஷியாகி தேவரிஷி யாகவில்லையா? (பாகவதம் முதல் ஸ்கந்தம்) நாம்கூட தக்க நிஷ்டையுள்ளவர்களாகி பிரயத்தனங்கள் செய்யின், ரிஷிகளின் ஸ்திதிக்கு வரக்கூடும். அவ்வித நிலையை யடைவதற்கு சாதன சதுஷ்டய ஸம்பத்தி அடையப் பிரயத்தனஞ் செய்யவேண்டும். இந்த சாதன சதுஷ்டய சம்பத்தி ஸ்வரூபத்தை ரிஷி சிஷ்யனுயுள்ள ஒருவருக்கு குருவான ரிஷி போதித்திருக்கிருர். இப்போதனை "பரமகுரு சரண ஸன்னதி" (At the Feet of the Master) என்ற கிரந்தத்தில் ரிஷிபால் தெரிந்துகொண்ட விஷயங்களை யெல்லாம் எழுதி யிருக்கிருர். அதிலுள்ள உபதேசம் சுலபமாகவும், பிரயோஜன முள்ளதாகவும், சித்த சுத்திகரமுள்ளதாயு மிருக்கின்றது. நன்ருய் வாசித்து அதனிடத்துள்ள உபதேசங்களை அனுஷ்டித்தல் ரிஷிகளின் சிஷ்யத்வத்தை அடைதனுக்கு பெரிய சஹகாரி. ஆகையா லிதை நன்ருய்ப் படித்தல்வேண்டும்.

இப்பொழுது கலியுகம் பிறந்து 5000 வருடங்களாகி இரண்டாவதான ஐயாயிரவருட காலச் சக்கரம் ஆரம்பமாகி, இந்த விரண்டுகால சக்கரங்களுக்கும் இது சந்தியா காலமாக இருக்கின்றது. இச்சந்தியா காலத்தில் ரிஷிகளெல்லாம் ஒன்றுகூடி அவர்களின் திவ்ய தேஜஸை விசேஷமாகப் பூலோகத்திற்கு நமது பரிசுத்தத்திற்காக அனுப்புகிறார்களென்பதாகவும் அதிசமீப காலத்தில் ஜகத்குருவான ஒரு மஹரிஷி பூலோகத்திற்குத் தன் பரிவாரங்களோடு வந்து, அவர் தேஜஸையும் போதனையையும் வியாபிக்கச்செய்து, ஜீவர்களைப் பரிசுத்தர்களாகச் செய்வாரென்பதாகவும், நாம் நிஷ்டையையும் பூததயையையும் அனுஷ்டிக்கின், இக்காலத்திய தேஜஸை விசேஷமாகப் பெறுவோமென்றும், இப்பொழுது விசேஷமாய் தக்கவர்களை ரிஷிகள் தங்கள் சிஷ்யர்களாக ஏற்படுத்திக் கொள்கிறார்களென்றும், இந்நலத்தையும் பெரிய பதவியையும் அடைதலுக்கு இக்காலம் மிகவும் அநுகூலமா யிருக்கிறதென்பதாகவும், ரிஷிகளின் அனுக்கிரஹத்தையும் தரிசனத்தையும் அடையப்பெற்ற அனுபவிகளான பெரியோர்கள் சொல்லுகிறார்கள். ஆகையால், பக்தன் நிவர்த்தி மார்க்கத்தை அப்பியசித்தல் வேண்டும். சமதமாதிகளையும் சித்த தைரியத்தையும் பலப்படுத்திக்கொண்டு, யுக்தாஹாரம், பிர்ம்மசரியம், ஞானம், பூததயை இவைகளை அப்பியசிக்கவேண்டும். ஸதா பரோபகாரங்களைச் செய்துகொண்டு, பாலர்களுக்கும் பாலிகைகளுக்கும் வித்தியா பிவிர்த்தியைச் செய்துகொண்டு, அவர்களிடம் பக்தி, ஸ்தைரியம், அடக்கம், பெரியோர்களிடத்து கௌரவம், இவைகளை விர்த்திப்படுத்தல் வேண்டும். பிரபுவின் வருகையை எல்லோருக்கும் சொல்லிக்கொண்டு அவருடைய தேஜஸையும் போதனையையும் கிரகிப்பதற்கு வேண்டிய பரிசுத்தத்வம், பக்தி, ஞானம் இவைகளை விர்த்தி செய்துகொள்ளும் வண்ணம் செய்தல்வேண்டும். இக்காலத்தில் சிலர் இதுவரைக்கும் ரிஷிக

வின் சிஷ்யர்களாகி யிருக்கிறார்கள். அனேகர்கள் அவ்வித மாவதற்குப் பாடு படுகிறார்கள். இவ்வித ஸ்திதியை அடைத லுக்கு இது தகுந்தகால மாகையால் இக்கால ஸ்வரூபத்தை யும், பக்தன் ரிஷி சிஷ்யனுவதற்குச் செய்யவேண்டிய பிரயத்த னங்களையும், அவற்றின் முக்கியத்தையும் போதிக்கவேண்டும். தானு மவ்வித பிரயத்தனங்களைத் தவராது செய்தல்வேண்டும். இவ்விதம் செய்து வரவர நாம் ரிஷி சிப்பந்திகளில் சேர்ந்து அவர்களுடைய சிஷ்யர்களாகிக் கிரமமாகப் பூரணர்களாவோம். இதற்கு வேண்டிய சாதன சதுஷ்டய ஸம்பத்தி, சிரத்தை, பக்தி, ஸ்தைரியம், ஸத்ஸங்கத்துவம், பூததயை, யோகநிஷ் டை, இவைகளை ஜகதீசுவரன் நமக்கு அளிப்பாராக.

"அகண்ட மண்டலாகாரம்—வியாப்தம் யேனசராசரம் |
தத்பதம் தர்சிதம்யேன—தஸ்மைஸ்ரீ குரவே நம:||"

"அஸதோமா ஸத்கமய—தமஸோமாஜ்யோ |
திர்கமய—ம்ருத்யோர்மா அம்ருதம் கமய||"

---

இப்புஸ்தகம் கடப்பை பிரம்மக்ஞான சபையின் அக்ரா சனுதிபதியான பிரம்மஸ்ரீ A. நஞ்சுண்டப்பா, B.A., B.L., அவர்களால் முதலில் தெலுங்கில் வெளியிடப்பட்டதை, பிரம்ம க்ஞானக் கிளைச்சபைகளின் இன்ஸ்பெக்டராகிய ஏனங்குடி ஸ்ரீமான் V. இராமச்சந்திரநாயுடு அவர்களால் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது.

# மஹாத்மாக்களின் தொழில். *

மஹாத்மாக்கள் அவர்களுடைய உயர்தர பிரக்ஞா பூமிக ளில் தொழிற்படும் முறையானது சாமானியர்க்குத் தெரியாதா யினும், அவர்கள் ஏராளமான தொழில்களை மேற்கொண்டவர் களென்றும் பெரிய உழைப்பாளிகளென்றும் இலகுவில் அறித ற்கு இடமிருக்கின்றது. ஸ்தூல சரீரத்தோடு உள்ள மஹான் கள் வெகு சிலரே உளராயினும் அவர்கள் வசமே இப்பூலோக த்தின் விகாஸ முறையானது ஒப்புவிக்கப் பட்டிருக்கிறது அதிலும் மனுஷ்ய வர்க்கத்தின் விகாஸமுறையை அவர்கள் நட த்தும் விதமானது பின்வரும் உதாரணத்தால் நமக்கு நன்கு தெரியவரும். பொதுவாய் ஒவ்வொரு மதமும் அதை யதைச் சேர்ந்த கோஷ்டியினர்களை ஒருங்கே சேர்த்து நல்வழிப் படுத் தும்பொருட்டு பற்பல விடங்களில் பற்பல மடங்களை ஸ்தாபி த்து இருக்கின்றதல்லவா? ஒவ்வொரு மடத்திற்கும் மடாதிபதி ஒருவரும் உண்டல்லவா? இதேமாதிரி இப்பூலோக முழுமை யும் பல கண்டங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு கண்டத்தி ற்கும் அதிபதியாக ஒரு மஹான் உளர். அவரவர் தத்தமக்கு ஏற்பட்ட கண்டத்தின் விகாஸமுறையைக் கவனித்து வருவர். மேற்கூறிய பற்பல மடங்களையும் ஜனங்களுடைய நன்மையை க்கருதி ஊக்கமாய் உழைத்துவரத் தூண்டுவதன் மூலமாய் அந்தந்த மதமானது விசேஷமான பெருமை யடையும்பொரு ட்டு சிற்சில சமயங்களில் பெரிய வித்வத் பரிஷத்துக்களையும் மஹா சமாஜங்களையும் ஏற்படுத்துவதுபோல, நமது பிரஹ்மக் ஞான சங்கமும் அதன் அதிகாரி புருஷர்களும் ஏதாவது ஒரு மதத்துக்குமட்டும் என்று இல்லாமல் மநுஷ்யவர்க்கம் முழு மைக்குமே உழைத்து வருகிறார்கள். மஹான்களுடைய சங்க த்தில், பிரஹ்மக்ஞான சபையைத்தவிர இன்னொரு வகுப்பும்

---

* இவ்வியாசம் ஸ்ரீமான். C. W. லேட்பீடர் அவர்களால் ஆங்கிலத் தில் முதலில் இயற்றப்பட்டது.

இதன் தமிழ் மொழிபெயர்ப்பு பூர்ண சந்திரோதயத்தினின்றும் அதன் அதிபரின் அனுமதின்பேரில் இங்கெடுத்துக் கொள்ளப்பட்டது.

உள்ளது. அஃதென்னவெனில், லோகத்தின் முக்கியஸ்தர்களான அரசர்களையும் மந்திரிகளையும் சமாதானத்தையே நாடச்செய்தும், ஆயிரக்கணக்கான ஜனத்திரள்களை ஒருங்கே சேர்த்து விசேஷ பாவங்களடங்கிய பிரசங்க மாரியால் மோகிக்கச்செய்யும் வாசாலகர்களின் மனங்களில் ஸர்வத்ர ஸமரஸமான தத்துவங்களை உதிக்கச்செய்தும், கலைஞர்களின் மநோபாவங்களையும் விருத்திபெறச்செய்தும், இவைகளின் மூலமாய் உலக முழுமையும் ஏராளமான சுகிர்தம் பெறும்வண்ணமும் அவ்வகுப்பினர் உழைத்து வருகின்றனர்.

மஹான்கள் இத்தகைய தொழில்களைத் தம் சிஷ்ர்களுக்கு ஒப்புவித்து, தாம், ஜீவர்களுடைய காரண சரீரங்களில் ஏற்படவேண்டிய அபிவிருத்திகளைக் கவனித்து வருகிறார்கள். ஸூர்ய கிரணங்களின் பிரவாகமானது புஷ்பங்களில் ஒளி வீச வீச, எவ்விதம் அவைகள் நவநவமான வர்ணங்கள் பொருந்திய அழகுகளையும், புதியபுதிய வாசனைகளையும் நாளுக்குநாள் அதிகமாக அமையப்பெற்று, கடைமுறையில் பூர்ணமான விகாஸம் அடைந்து விளங்குகின்றனவோ, அவ்விதமே மஹான்களுடைய ஆத்ம விளக்கத்தின் பிரகாசத்தாலும், எல்லா ஜீவர்களும் உஜ்ஜீவிக்கிறார்கள். அநேகர் இத்தகைய உணர்வைச் சிற்சில சமயங்களில் அறிகின்றாராயினும், இதன் காரணஸ்தர்கள் மஹான்கள் என்பதைமட்டும் அறியாதவர்களாயிருக்கின்றனர். சாமான்யர்களுடைய காரண சரீரமானது, * சுத்த மநோலோகத்தில் வெளி விஷயங்களைக் கிரகிப்பதற்கேற்ற பூரணசக்தி வாய்ந்ததாக இன்னும் ஏற்படவில்லை. கார

---

* மாநஸலோகமானது சுத்தமநஸ் என்றும், அசுத்தமநஸ் என்றும் இருவகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஸாமான்யர்களெல்லோரும் பூலோகம், காமலோகம், அசுத்த மநோலோகம் என்ற மூவுலகங்களிலேயே சஞ்சரிப்பதும், திரும்ப பூலோகத்தில் ஜன்மம் எடுப்பதுமாக பலமுறை ஜன்மங்களெடுத்துத் தேர்ந்த அநுபவம்பெற்ற மேல் முக்தியடைந்து கீழான மூன்று லோகங்களையும் துறந்து மஹான்களாகி சுத்தமநோலோகம் புத்தி தத்துவலோகம் ஆத்மிகலோகம் ஆக மூன்று மேலுலகங்களிலும் ஸஞ்சரிப்பர்.

ணசரீரமே இப்போதுதான் வளரும் பருவத்தில் இருக்கிறபடியால், அச்சரீரத்திற்குப் புறம்பேயுள்ள விஷயங்களைக் கிரஹிப்பது அதற்குக் கூடாத காரியமா யிருக்கிறது. முட்டைக்குள்ளிருக்கும் கோழிக்குஞ்சானது தான் வளருவதைமட்டும் உணர்கின்றதே யல்லாமல், வெளியினின்று முட்டையிற் தாக்கும் உஷ்ணத்தால் அது வளருகின்றது என்பதை அறியாது. ஆயினும் உண்மை யென்னவெனில், உஷ்ணமானது கோழிமுட்டையில் தாக்கத்தாக்க, குஞ்சானது வளர்ச்சிபெற்று வெளிக்கிளம்ப ஹேதுவாகின்றது. பக்ஷியானது முட்டையிலிருந்து வெளிக் கிளம்புவதற்கு ஒப்பாக, மநுஷ்யனும் எத்தருணத்தில் சுத்த மநோலோகத்தினின்று வரும் அலைகளைக் கிரஹிக்கும் மேன்மையுடையவனுகிருனே, அத்தருணம் முதற்கொண்டு அவனுடைய அபிவிருத்தியானது மேன்மேலும் சீக்கிரமாக நிகழ்கின்றது.

அசுத்த மநோசரீரங்கூட பூர்ண அமைப்பு ஏற்படாமல் இப்போது தான் கருவாயிருக்கின்ற ஜீவர்களையும்† கூட, மஹான்களுடைய தேஜோமயமான சக்தியானது மாநஸலோகம் முழுமையையும் வியாபிக்கக்கூடிய தாகையால், விரைவில் விருத்தியடையச் செய்கின்றது. அஃதெப்படியெனில், சூரிய கிரணங்கள்போல அவர்களுடைய சக்தியானது, மாநஸலோகம் முழுமையும் வியாபித்து அதன் எல்லைக்குட்பட்ட அனைத்தையும் சலிக்கச்செய்கின்றது. மஹான்கள் மிகுந்த நற்பயன்களை விளைக்கும்பொருட்டு, புண்யகாலங்களிலும், புண்ய க்ஷேத்திரங்களிலுமே தம் அருட்சக்தியின் பிரவாஹத்தை விசேஷமாய் வர்ஷிப்பர். புண்ய க்ஷேத்திரங்களிற் சில, மஹான்களுடைய

---

† இந்த ஜீவர்கள் ஒவ்வொருவருக்கும் பற்பல மிருக சரீரங்கள் உண்டு. இந்த ஜீவர்களுக்கும் மநுஷ்ய சரீரத்தில் ஆவேசித்திருக்கும் ஜீவர்களுக்கும் அதிக வித்யாசமுண்டு. முன்னவர்கள் விகாசமுறையில் தாழ்ந்தவர்கள். பின்னவர்கள் விகாசமுறையில் ஒருபடி அதிகமா யேறியவர்கள். மநுஷ்ய சரீரம் ஒவ்வொன்றுக்கும் ஒரு ஜீவன் உண்டு. மிருகவர்க்கத்தில் ஒரே ஜீவன் பற்பல மிருகங்களை ஆவேசித்துக் கொண்டிருக்கிறுன்.

அருட் சக்திநிறைந்த யந்த்ர ஸ்தாபநங்களால் ஏற்பட்டிருக்கலாம்; அல்லது பெரியார் எவரேனும் வஸித்து ஸித்தியடைந்த ஸ்தலங்களா யிருக்கலாம்; அல்லது அத்தகைய பெரியாருடைய சின்னங்கள் பல இருந்து அற்புத சக்திவிசேஷங்களை வெளியிட்டுக் கொண்டிருக்கலாம். ஏற்கனவே இத்தகைய பரிசுத்தமான சூக்ஷ்ம சக்திகளால், வியாபிக்கப்பட்டுப் புனிதமான க்ஷேத்ரங்களிலேயே, தாமும் சேர்ந்து பன்மடங்கான நற்பயன்களை விளைத்தற்பொருட்டு, பிரஸந்நர்களா யிருப்பர். தவிரவும் ஏராளமான ஜனங்கள் பக்திமான்களாகத் தீர்த்தயாத்திரை சென்று ஒருங்கேகூடி, ஈசனை அவர்கள் வழிபடும் துறையிலேயே, தாமும் எழுந்தருளி அநுக்ரஹிப்பதும் இம் மஹான்களுடைய வழக்கம்.

மேலுலக வாஸிகளாகிய மஹான்களுடைய இத்தகைய உதவியால்தான் நாம் இப்போதிருக்கும் தற்கால ஸ்திதிக்கு அபிவிருத்தியடைந்து வந்திருக்கிறோம். நாம் இப்போது ஐந்தாவது மஹா கல்பத்தில், * நான்காவது கல்பத்தின் † மத்தியிலிருக்கிறோம். இக்காலத்தில், ஸ்வபாவகதியில் நாம் நமது காமநாசரீரங்களைச் சுத்திசெய்து காமநாலோகத்தில் அல்லது புவர்லோகத்தில் பூர்ணமாய் வியவஹரிக்கக்கூடிய சக்தியைப் பெற்றாலுமே போதுமானதாயிருக்க, ஐந்தாவது கல்பத்தில் நாம் பெறவேண்டிய ஸித்தியாகிய (மநோலோக) வியவஹாரத்தை இப்போதே ஆரம்பித்துவிட்டோம். இது எவ்விதம் சாத்தியமாயிற்றெனில், சுக்ர கிரஹத்தினின்று நமது கிரஹத்தின் விகாஸமுறையைச் சீக்கிரப் படுத்தும்பொருட்டு குமாரர்கள் நமது பூலோகத்திற்கு வந்தார்கள்; அவர்கள் உதவியாலும், மற்ற மஹான்களின் உதவியாலுந்தான் நாம் இவ்வபிவிருத்தி யடையச் சாத்தியமாயிற்று. நாம் இவ்விதம் அபிவிருத்தி யடையும் பொருட்டு, அம்மஹான்கள் தம் தேஜோமயமான சக்தியை எப்போதும் தியாகஞ் செய்துவருகிறார்கள்.

---

* மஹாகல்பம் - Planetary Chain.

† கல்பம் - Round.

மஹான்களுடைய தொழிலைப்பற்றிக் கொஞ்சமேனும் அறிந்த எவருக்கும், முக்யமாய் மஹான்கள் செய்துவரும் வேலையை எமது பாக்கியவசத்தால் நாங்கள் பார்த்தமட்டில், அவர்களிடம் ஸ்வயநலத்தை உத்தேசித்து யாதொன்றையும் வேண்டுவதற்கு மநம் துணியாது. அவர்கள் செய்துவருகின்ற மஹோபகாரமான உழைப்பெங்கே! அவர்கள் உலக விகாஸ முறைக்கு உழைக்கும் காம்பீர்யமும், பெரும்போக்கும், அவர்கள் அத்தகைய பிரவிர்த்தியைக் கைக்கொள்ளும் முக்யதையும், நம் போலியர் ஒவ்வொருவருடைய க்ஷேமலாபங்களையும் தனித்தனியாக அவர்கள் கவனிக்க முடியாதென்பதை, நன்கு விளக்குகின்றன. மஹாத்மாக்கள் ஜீவர்களுடன் பிரத்யேகமான சம்பந்தம் வைத்துக்கொள்வதற்குத் தம் சிஷ்யர்களையும், இதர தேவதைகள் சிலரையும் ஆக்ஞாபிக்கின்றனர். ஆகையால் நம்மவர்கட்மை என்னவெனில், சாமாந்யமான மேற்கூறிய உதவியை மற்றையோருக்குச் செய்துவரும்படி சக்தர்களாகவும், யோக்யர்களாகவும் பயின்று வரவேண்டியதேயாகும். இதன் மூலமாய், மஹான்கள் நேரே கவனிக்க இயலாத வேலையைத் தற்காலத்தில் நாம் முடிப்பதற்கேற்ற கருவிகளாகலாம். மஹான்களோ அவர்களுடைய அபாரமான பிரயத்நங்களைவிட்டுச் சற்றும் சில்லரை வேலைகளைக் கவனிக்க அவகாச மில்லாதவர்கள். பூலோகத்தில் இறந்து புவர்லோகத்தில் வந்து மதிமயங்கித் தத்தளிக்கும் பலரை, நம்மவர்கள் தூங்கும்போது புவர்லோகத்தினின்று தேற்றலாம். நாம் அவ்விதம் செய்ய முயலாவிடில், புவர்லோகத்தில் இவ்வித உபகாரம் நிகழமுடியாதன்றோ! நாம் எவ்வளவுக் கெவ்வளவு சீக்கிரம் இவ்வேலைகளை யெல்லாம் செய்யப் பழகிவருகிறோமோ, அவ்வளவுக் கவ்வளவு சீக்கிரம் அதி மேன்மையான வேலைகளையெல்லாம் செய்வதற்குச் சிஷ்யர்களாக அங்கிகரிக்கப் பெறுவோம்.

மஹாத்மாக்கள், நம் போலியரான அற்பமான கருவிகளைக்கொண்டும் தொழிற் படுவானேன்? என்று பலர் கேட்கிறார்கள். அவர்களே எல்லா வேலையையும் செய்துமுடிப்பதென்

ருல் ஸாவகாசம் போதாது. அதனுல், செய்த மட்டில் ஸிலாக்கியம் என்று கருதி, தம்மிடத்து அகப்பட்ட கருவிகளைக்கொண்டு, வேலைகளை முடிக்கின்றனர். இல்லாவிடிலோ, வேலைகள் செய்யப்படாமலே இருக்கின்றன. உதாரணமாக,ஜகதுபகாரார்த்தம் ஸத்கிரந்தங்களை அருளிச் செய்யவேண்டியது ஒரு வேலை. இவ்வேலையை மஹான்கள் தம் சிஷ்யர்களைக் காட்டிலும் எவ்வளவோ மேன்மையாய்த்தான் செய்வார்கள். எவ்வித அற்பப்பிழையும் நேரிடாவண்ணம் செய்வார்கள். இவ்வித வேலைகளுக்கு சாவகாசமேயவர்கட்குக் கிடைப்ப தரிதாகையால், அவர்கள் சிஷ்யர்களின் மூலமாகவும் செய்யப்படாவிடில், ஒருபோதும் செய்யமுடியாது. தவிரவும், மஹான்களே எவ்வற்ப வேலையையும் செய்து வருவார்களேயானுல், அவர்களைக் காட்டிலும் இளைஞர்களான சிஷ்யர்கள் செய்யக்கூடிய ஸத்கர்மாவைப் பறித்துப் போகிறவர்களாவர். சிஷ்யர்கள் மஹான்களைப்போல அவ்வளவு நன்ருய்ச் செய்ய இயலாவிடினும், தம்மினும் எத்தனையோ படிகளில் தாழ்ந்த மநுஷ்ய கோடிகளுக்கு எண்ணிறந்த நன்மையை விளைப்பதற்குப் போதிய சக்தியுடையவர்கள்.

ஒவ்வொரு மஹானுக்கும், ஏராளமான சக்தி யுள்ளபோதிலும், அது நமக்கு அளவிறந்ததெனத் தோன்றியபோதிலும், அவர்களுடைய பிரக்ஞைக்கு அளவுக்குட்பட்டதாகையால், லோகஸம்ரக்ஷணார்த்தம் தம் சக்தியை எவ்வளவு உபயோகமாய்ச் செலவிடக்கூடுமோ, அவ்விதந்தான் அவர்கள் செய்வார்கள். ஆகையால் அவர்கள் தம் சக்தியைக்கொண்டு எத்தகைய உயர்ந்த பிரயோஜனத்தை விளைக்கக்கூடுமோ, அதற்கு அந்யதாவாகச்செய்வது உண்மையில், தகாத காரியமென்றுகூடச் சொல்லலாம். அவர்களிடம் பக்திக் குறைவினுல் இவ்விதம் சொல்லுகின்றவனல்லன். உண்மையில், அவர்கள் எல்லோருடைய பொது க்ஷேமத்திற்குமாகச் செலவிடக்கூடிய அற்புத சக்தியை, தனித்தனியான ஜீவர்களைக் கவனிப்பதில் செலவிடார்கள் என்றே நாம் அறியற்பாலது.

# சாந்தி வசனம்.

இத்தொடரில், பிர்ம்ம வித்தியா மகாசபையைச் சேர்ந்த உயர்ந்த அநுபவிகளாற் கூறப்பட்டுள்ள அரிய ஆங்கில நூல்களை செந்தமிழில் தகுந்தவர்களால் மொழிபெயர்த்து மாதமொரு புஸ்தகமாக பிரசுரம்செய்து வருகிறோம். இதனாற் கிடைக்கும் சகல வருமானமும் இவ்வூர் தர்மக் கல்விச் சாலைக்கே உபயோகமாகிறது.

வருஷசந்தா தபால் சார்ஜுட்பட இந்தியாவுக்கு ரூபா 2-0-0
ஷை ஷை வெளிநாடுகளுக்கு ரூபா 2—8—0
தனி நம்பர் (தபால் சார்ஜ் பிரத்தியேகம்) 0—3—0

இதுவரையில் வெளியான புஸ்தகங்கள்:—

Vol. I.

No. 1. கர்மபால போதம்.
No. 2. ஆத்மார்த்த ஒழுக்கப்பயிற்சி, கிரஹஸ்தாச்ரமம்.
No. 3. பக்தியின் மகிமை.
No. 4, 5, 6 'அவன் பெயரால். (இந்நான்கும் செலவாகிவிட்டன.)
No. 7 to 10 கல்வி கற்பித்தல் ஈசுவரகைங்கரியம் 0—8—0
No. 11, 12 'எனது பிரதிக்ஞை' முதல்பாகம் 0—4—0

Vol. II.

No. 1, 2 'எனது பிரதிக்ஞை' இரண்டாம் பாகம் 0—6—0
No. 3, 4 'எனது பிரதிக்ஞை' மூன்றாம்பாகம் 0—6—0
No. 5, 6 & 7 பிரமஞானத்தின் விசாரத்தால் நமக்குறும் பயனியாது 0—9—0
No. 8. பிர்ம்மக்ஞானமும் இஸ்லாமும் 0—3—0
No. 9. நமது பெரிய துரவஸ்தை 0—3—0

தேவையுள்ளவர்கள் அடியிற்கண்ட விலாசத்துக்கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

---

## விளம்பர விகிதம்.

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| ஒருபக்கத்திற்கு | ஒரு மாதத்திற்கு | 3 | 0 | 0 |
| அரைபக்கத்திற்கு | " | 2 | 0 | 0 |
| கால்பக்கத்திற்கு | " | 1 | 8 | 0 |

ஒரு வருடத்திற்கு ஒப்பந்தம் செய்துகொள்ளுகிறவர்களுக்கு மொத்தத்தொகையில் 100-க்கு 12½-விகிதம் கழித்து வாங்கப்படும். எப்போதும் முழுத்தொகையும் முன்பணமாய் அனுப்பப்பட வேண்டும்.

☞ சாந்தி வசனம் ஆபீஸ்,
திருமீயச்சூர், பேரளம் போஸ்ட், தஞ்சாவூர் ஜில்லா.